## தைரியமும் ஞானமும் ராஜதந்திரமும் நிறைந்த

# முதல்வர் மு.க.ஸ்டாலின் நாட்டிற்கே வழிகாட்டியாகத் திகழ்கிறார்!

## சென்னை கிழக்கு மாவட்டத்தில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்ற முதல்வர் பிறந்தநாள் விழாப் பொதுக் கூட்டத்தில் கவிப்பேரரசு வைரமுத்து புகழாரம்!

**சென்னை,மார்ச்.28-**

**“தைரியமும் ஞானமும் ராஜதந்திரமும் நிறைந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாட்டிற்கே வழிகாட்டியாகத் திகழ்கிறார்” என்று கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் சென்னை கிழக்கு மாவட்டத்தில் அமைச்சர் பி.கே. சேகர் பாபு முன்னின்று நடத்திய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போது கூறினார்.**

**சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் தொகுதியில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர் பாபு நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெற்ற கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா மாபெரும் கருத்தரங்கில் கலந்து கொண்டு கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :**

எதைப் புகழ்வது என்று எனக்கு தெரியவில்லை. அறிவார்ந்த நீதியரசர்கள் திரண்டிருக்கும் இந்த மேடையை நான் பாராட்டுவதா? வார்த்தைக்கு வார்த்தை கரவொலிகளால் கொண்டாடுகிற உங்களை நான் பாராட்டுவதா? இப்படி ஒரு மேடையை இப்படி ஒரு சபையை ஏற்படுத்தி, முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற நமது தலைவனை பாராட்டிக் கொண்டிருக்கும் அண்ணன் சேகர் பாபு அவர்களை பாராட்டுவதா? யாரை பாராட்டுவது என்றே எனக்கு தெரியவில்லை.

ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லுகிறேன்... எல்லோரும் ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறந்தவர்கள்; சேகர்பாபு மட்டும் செயலுக்கும் புயலுக்கும் பிறந்தவர். எப்போதும் ஒரு கூட்டத்தை தன் உள்ளங்கையில் உணர்ச்சியோடு வைத்திருக்கத் தெரிந்த ஒரு அமைச்சர், நம்முடைய சேகர் பாபு அவர்கள்.

### ரகசியங்களை நெஞ்சோடு புதைக்கும் நீதியரசர்கள்!

நீதியரசர்களுக்கு இது ஒரு வியப்பான மேடையாக இருக்கும் என்பது எனக்கு தெரியும். நீதியரசர்களுக்கும் வியப்பு உங்களுக்கும் வியப்பை இந்த மேடை தந்திருக்கும் என்பதை என்னால் உணர முடிகிறது.

நீதியரசர்கள் செல்லுகிற மேடைகள் எல்லாம் மௌனத்தால் அலங்கரிக்கப்பட்டவை; அவர்களைச் சுற்றி நிசப்தம் நிலவ வேண்டும்; ஒலிகள் அவர்களுக்கு உதவாத செய்தி; அவர்கள் மென்மையாக பேசுவார்கள்; உறுதியாக இருப்பார்கள்; சொற்களை, தங்கச் சொற்களைப்போல பயன்படுத்துவார்கள்; அவர்களைச் சுற்றி அமைதியே சூழ்ந்திருக்கும். அந்த நீதியரசர்கள், தங்கள் வாழ்க்கையில் அமைதியைத் தாண்டி வந்தவர்கள். முதன்முதலாக ஆரவாரமிக்க ஒரு மேடையை இப்போதுதான் பார்க்கிறார்கள்.

நீதியரசர்களைப் பற்றியும் உங்களுக்கு ஒன்று சொல்லியாக வேண்டும். மனைவியோடுகூட ரகசியத்தைப் பகிர்ந்து கொள்ளாதவர்கள். இன்னொன்றும் சொல்லப்போனால், மனைவியைக்கூட அதிகம் புகழாதவர்கள். நீதியரசர்கள் யார் என்று கேட்டால், மொழியை அர்த்தத்தை ரகசியங்களை நெஞ்சோடு புதைத்துக் கொள்ளுகிறவர்கள்.

தீர்ப்பு எழுதுவது, ஒரு சட்டப் புத்தகத்தைப்போல... ஒரு சட்டப் புத்தகத்தை உருவாக்குகிற மேதைகளும் தீர்ப்பு எழுதுகிற மேதைகளும் சொற்களின் பெருமை அறிந்தவர்கள். அவர்களால் சொற்களைத் தண்ணீரைப் போல செலவழிக்க முடியாது. அப்படிப்பட்ட கட்டுப்பாடுமிக்க நீதியரசர்கள் இன்றைக்கு முதலமைச்சர் அவர்களை வெள்ளம்போல் புகழ்ந்திருக்கிறார்கள். காவிரி வெள்ளம், ஆடிப் பெருக்கில் ஓடி வருவதைப்போல கோடை மழை, வானத்தைக் கிழித்துக் கொண்டு பூமியில் நனைப்பதைப் போல சூறைக்காற்று, பூமியைச் சுழற்றி அடிப்பதைப்போல நெஞ்சில் கொஞ்சமும் எந்தப் பாகுபாடும் இல்லாமல் முதல்வரைப் பாராட்டி இருக்கிறார்கள் என்பது எனக்குப் பெருமிதமாக இருக்கிறது. காரணம், இப்போது அவர்கள் சுதந்திரப் பறவைகள். உண்மைகளைச் சொல்லலாம்; அந்த உண்மையைச் சொல்லி அவர்கள் பாராட்டுகிறார்கள்.

### நீதிபதிகளை வைத்துக் கொண்டு புலவனை சோதிக்கலாமா?

நண்பர்களே... நீங்கள் எல்லாம் தப்பித்துக் கொண்டீர்கள். நான்தான் மாட்டிக் கொண்டேன். அமைச்சர் அவர்களே... இது என்ன நீதி? என்று எனக்கு தெரியவில்லை. மூன்று நீதிபதிகளை வைத்துக் கொண்டு ஒரு புலவனை இப்படிச் சோதிக்கலாமா? மூன்று நீதியரசர்கள் இங்கே பேசுவதற்கு வந்திருக்கிறார்கள். ஒரே ஒரு கவிஞன் இந்த மேடையில் உரையாற்ற வந்திருக்கிறேன். எனக்கு என் கல்லூரி நாட்கள் ஞாபகத்திற்கு வந்துவிட்டன. பல கல்லூரிகளுக்குப் பேச்சுப் போட்டியில் பேச செல்வோம். அங்கே மூன்று நீதிபதிகள் அமர்ந்து ‘மார்க்’ போடுவார்கள். அந்த மூன்று நீதிபதிகளும், கவிதைகளுக்கும் சொற்பொழிவுக்கும் மதிப்பெண் அளித்து, யார் முதல் பேச்சாளர்? யாருக்கு முதல் பரிசு வழங்கலாம்? என்பதை அந்த ஆன்றோர்கள் தீர்மானிப்பார்கள். நீண்ட நாட்களுக்குப் பிறகு - சற்றொப்ப 55 ஆண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் என் பேச்சுக்கு மதிப்பெண் அளிக்கும் மூன்று நீதியரசர்களை, நான் இந்த மேடையில் பார்க்கிறேன். உங்களைப் பார்த்து நான் மகிழ்ந்து நிற்கிறேன்.

இந்த மூன்று நீதியரசர்களும் என் மதிப்புக்குமிக்கவர்கள். நீதியரசர் பாட்ஷா அவர்கள், என் சகோதரர் எனக்குத் துணை இருக்கிறவர்; ஐயா அக்பர் அலி அவர்கள், போற்றத் தகுந்தவர்; ஐயா சந்துரு அவர்கள், இலக்கிய உலகத்திலும் கலை உலகத்திலும் நீதி உலகத்திலும் பெரும் புகழ் பெற்றவர். அவர் ஒவ்வொரு அசைவையும் தன்னுடைய நீதியை வைத்தே தீர்மானிக்கிற ஒரு பெரிய இடத்தில் இருக்கிறவர். இந்தப் பெருமக்கள் கூடியிருக்கிற மன்றத்தில் தளபதி ஸ்டாலின் அவர்களைப் பற்றி நானும் உரையாற்றுகிறேன் என்கிறபோது எனக்கு பெருமையாக இருக்கிறது.

**நண்பர்களே... நம்முடைய தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் எதை நம்புகிறவர் என்பது எனக்குத் தெரியும். சொற்கள் என்பவை எவை? செயல்கள் என்பவை எவை? என்பது நமக்கெல்லாம் தெரியும். ரஷ்யப் பழமொழி ஒன்று உண்டு. ‘சொல் என்பது பித்தளை; செயல் என்பது தங்கம்.’ சொற்கள் என்ற பித்தளைகளைத் தாண்டி, செயல் என்ற தங்கத்தை மதிக்கிறவர் முதலமைச்சர் தளபதி ஸ்டாலின் என்பதை நான் அனைத்து நிலைகளிலும் உணர்ந்திருக்கிறேன். அதைப் பின்பற்றிதான், நம்முடைய சேகர்பாபு அவர்களும் கூட, நான் சொற்களை நம்புகிறவன் அல்ல; நான் செயல்களை நம்புகிறவன் என்றுதான் ஒவ்வொரு அங்குலமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.**

### செயல் வேகம் மிக்க சேகர்பாபு!

நான் சேகர்பாபு அவர்களை ஆச்சரியத்தோடு பார்ப்பேன். நாங்களும் தான் செயல்படுகிறோம்; நாங்களும் தூங்கிக் கொள்கிறோம்; நாங்களும் உணவு கொள்கிறோம்; நாங்களும் குளித்துக் கொள்கிறோம்; நாங்களும் உறவாடுகிறோம்; உரையாடுகிறோம்; உடற்பயிற்சி செய்கிறோம். இந்த மனிதன் எதுவுமே இல்லாமல் வேலையை மட்டுமே பார்த்துக் கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. அவர் தூங்கும் பொழுது கூட, இவர் காலாட்டிக் கொண்டும்; செல்போன் பேசிக் கொண்டும் இருப்பாரோ என்ற ஒரு ஐயப்பாடு என்னை ஆட்கொள்கிறது. அவ்வளவு செயல் வேகம். இந்த செயல் வேகம் தான் அவரை நிலைக்க வைக்கிறது.

எனக்கு பிடித்த ஒரு பழமொழி உண்டு. ஒவ்வொருவருக்கும் ஒரு பழமொழி பிடிக்கும். ‘நாடு உனக்கென்ன செய்தது என்று கேட்காதே; நாட்டுக்கு நீ என்ன செய்தாய் என்று கேள்’ இது ஜான் எஃப். கென்னடி சொன்னது என்று சொல்வார்கள். இல்லை, ஜான் எஃப். கென்னடிக்கே கூட கலில் ஜிப்ரான் என்ற அரபிக் கவிஞன் சொன்னது. அப்படி சிறந்த உரை அது. ... சொன்னான், ‘பெண்கள் இல்லையேல் ஆண்களுக்கு ஆறுதலே கிடைத்திருக்காது. ஆனால், பெண்களே இல்லை என்றால், ஆண்களுக்கு ஆறுதலே தேவை இருந்திருக்காது’ இப்படிச் சொன்னவன் .... இது ஒரு சொல். ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ இது ஒரு தமிழ்ப் புலவன் உலக மாந்தர்களை நோக்கிச் சொன்ன உயர்ந்த சொல்.

### முதல்வர் நின்ற இடத்தில் நிற்காமல் ஓடிக்கொண்டே இருக்கிறார்!

அவ்வாறு சொன்னால், எனக்குப் பிடித்தமான ஒரு சொல் உண்டு. ‘நின்ற இடத்தில், நிற்க வேண்டுமா... ஓடிக்கொண்டே இரு.’ இந்த சமயம் நான் அதிக கரவொலிகளை எதிர்பார்த்தேன். ஏனென்றால், இது புரிந்திருக்க வேண்டும் என்று மயங்கினேன். கைதட்டலுக்கு ஆசைப்படுகிறவன் அல்ல பேச்சாளர்; தன் கருத்து சபைக்கு சென்று சேர்கிறதா என்று கவனிக்கிறவனே பேச்சாளன். ஓரிடத்தில் நீ உன்னை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகக் கூட நீ ஓடிக் கொண்டே இருக்க வேண்டும். அதைத்தான் சேகர்பாபு செய்து கொண்டிருக்கிறார் என்று நான் நினைக்கிறேன்.

**நம்முடைய தளபதி ஸ்டாலின் அவர்கள், முதலமைச்சராக திராவிட மாடலின் தலைவனாக இந்த இந்தியத் துணைக் கண்டத்துக்கு வழிகாட்டக்கூடியனாக திகழ வேண்டும் என்று நினைக்கிறார். அப்படி நினைப்பதற்கு, அவர் நின்ற இடத்தில் நிற்காமல் ஓடிக் கொண்டே இருக்கிறார். ஒவ்வொரு நாளும், ஓர் அங்குலம் வளர்கிறார் என்று எனக்குத் தெரிகிறது.**

### 3 முதலமைச்சர்களை மறக்க முடியாது!

நண்பர்களே... நான் 3 முதலமைச்சர்களை மறக்க முடியாதவன். பேரறிஞர் அண்ணா, முதலமைச்சர் என்ற எல்லைக்கு மேலே சென்றவர். அவரை நான் விட்டு விடுகிறேன். பெருந்தலைவர் காமராஜர், முத்தமிழறிஞர் என் தமிழ் ஆசான் கலைஞர் அவர்கள் - அடுத்து, தளபதி ஸ்டாலின் அவர்கள். இந்த மூன்று பேரும் செயல் வீரர்கள்; இந்த மூன்று பேரும் அடித்தட்டு மக்களை நேசித்தவர்கள்; இந்த மூன்று பேரும் இந்தத் தமிழகத்தை தங்கள் தோள்களில் தாங்கி உயர்த்த வேண்டும் என்று துடித்தவர்கள்; இந்த மூவருக்குள் கொள்கை வேறுபாடுகள் என்பதெல்லாம் வேறு. அவர் காங்கிரஸ்காரர்; இவர் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் என்பதெல்லாம் இரண்டாம் பட்சம். தமிழ்நாடு தமிழன் அடித்தட்டு மனிதன் கருப்புத் தமிழன் இவர்களைத் தூக்க வேண்டும் என்று துடித்தவர்கள். இந்த மூன்று பேருக்கும் ஒரு வேறுபாடு இருப்பதை நான் உங்களுக்கு உணர்த்த வேண்டும்



என்று ஆசைப்படுகிறேன். காமராஜர் யார் தெரியுமா? செயல் வீரத்தில், அவருடைய சொல் என்ன தெரியுமா? ‘ஆகட்டும் பார்க்கலாம்’ - இது காமராஜர். கலைஞருக்கு ஒரு சொல் உண்டு. ‘ஆயிற்று பார்த்தாயா’ இது கலைஞர். தளபதிக்கு ஒரு சொல். நான் நுட்பமாக பார்த்த சொல், ‘ஆயிற்று, அடுத்தது பார்த்தாயா’. இந்த மூன்று பேருமே செயல் வீரர்கள்.

நண்பர்களே... அமெரிக்க ஜனாதிபதி, இந்த உலகத்தில் அதிகாரமிக்க ஒரு பதவிக்கு உரியவர் என்று சொல்லப்படுவது உண்டு. தமிழ்நாட்டு முதலமைச்சர், என் தமிழ்நாட்டுக்கு ஒரு அதிகாரமிக்க பீடத்தில் இருப்பவர். இந்த இரண்டு பேருக்கும் ஒரு வேறுபாட்டை நான் பார்க்கிறேன். அமெரிக்க ஜனாதிபதிக்கு இல்லாத ஒரு கூறு, தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு உண்டு என்று நான் கண்டுபிடித்திருக்கிறேன். இது மிகையாகச் சொல்லப்படுகிற செய்தி அல்ல. நானும் நீதியரசர்களோடு உட்கார்ந்திருப்பதால், மிகையான சொற்களை அதிகமான அடைமொழிகளை தவிர்த்துவிட்டு பேச வேண்டும் என்று நினைக்கிறேன். எப்போதுமே ஒரு பேச்சு, சொற்களை நம்பி அல்ல; அடைமொழிகளை நம்பி அல்ல; அலங்காரங்களை நம்பி அல்ல; மிகைமொழிகளை நம்பி அல்ல; ஒரு பேச்சு, சத்தியத்தை நம்பித்தான் இருக்கிறது என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

**அமெரிக்க ஜனாதிபதி, வெள்ளிக்கிழமை மாலை தன் கோட்டை கழற்றி எறிந்து விடுவார்; தான் அமெரிக்க ஜனாதிபதி என்பதை மறந்து விடுவார்; WeekEnd இது வாரத்தின் கடைசி. இனி வருவது சனி, ஞாயிறு. சனிக்கிழமை நான் அமெரிக்காவின் ஜனாதிபதி அல்ல; என் பெயருக்கும் உரியவன்; நான் ஒரு மனிதன்; நான் ஒரு குடும்பத் தலைவன்; நான் ஒரு ரசிகன்; நான் ஒரு போகி; எனவே, வெள்ளிக்கிழமை மாலை நான் உடைகளோடு என் பதவியையும் உதறிவிடுகிறேன். இதோ, எனக்குப் பிடித்தமான நாய்க்குட்டி; எனக்குப் பிடித்தமான தோட்டம்; எனக்குப் பிடித்தமான இந்த ஆயிரம் டாலர் மலர்கள்; எனக்குப் பிடித்த இந்த ஓடம்; எனக்குப் பிடித்த நதி; எனக்குப் பிடித்த விமானம்; எனக்குப் பிடித்த உணவு; எனக்குப் பிடித்த நண்பர்கள். இவர்களோடு என் பொழுதை கழிக்கிறேன். என்னோடு பறவைகள் இருக்கட்டும்; என்னோடு மேகங்கள் உலாவரட்டும்; எனக்கு நதிகளின் சத்தம் கேட்கட்டும்; எனக்கு பறவைகளின் சங்கீதம் கேட்கட்டும்; சனி, ஞாயிறு நான் ஜனாதிபதி அல்ல; நான் நானாக இருக்க விரும்புகிறேன் என்பதுதான், அமெரிக்க ஜனாதிபதிகளின் கொள்கை.**

### தூங்குவதற்கு நேரமில்லாத முதலமைச்சர்!

தமிழ்நாட்டு முதலமைச்சர், 365 நாட்களும் அவர் முதலமைச்சர். சனி, ஞாயிறு தெரியாது. அவருக்கு தேதிதான் தெரியுமே தவிர, கிழமை தெரியாது என்பதுதான் தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு வழங்கப்பட்டிருக்கிற உரிமை என்று நான் நினைக்கிறேன். சனிக்கிழமையும் கூட்டம்; ஞாயிற்றுக்கிழமையும் கூட்டம்; சனிக்கிழமையும் உழைப்பு; ஞாயிற்றுக்கிழமையும் உழைப்பு; இரவு 12.15 மணிக்கு ஒரு போன் வருகிறதா... டிஜிபி அழைக்கிறாரா... உளவுத்துறை ஐ.ஜி. அழைக்கிறாரா... மாவட்டச் செயலாளர் அழைக்கிறாரா... கலெக்டர் அழைக்கிறாரா... யார் அழைத்தாலும், அவர் தொலைபேசியை தொட்டாக வேண்டும்; என்ன விஷயம் என்று கேட்டு முடிவெடுத்தாக வேண்டும். எனவே, தூங்குவதற்கு நேரமில்லாத ஒரு வாழ்க்கையை நம்முடைய முதலமைச்சர் வாழ்கிறார் என்று நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அதனால்தான், அந்த செயல் வீரத்துக்கு நன்றி செலுத்தத்தான், நாம் இங்கு கூடியிருக்கிறோம். நண்பர்களே... அவர் உழைப்புக்கு ஒரு கைத்தட்டல் வேண்டும். அது அவருடைய வீட்டுக்கு கேட்க வேண்டும் என்று உங்களை நான் விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

### மக்களால் நேசிக்கப்படுகிறவர்தான் நேசிக்கப்படுகிறார்!

நண்பர்களே... மிக முக்கியமான ஒரு செய்தியை சொல்லி நான் விடை பெற வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். மக்களை நேசிக்கிறவன்தான், நேசிக்கப்படுகிறான். அவர் உலா செல்கிறபோது கவனிக்கிறேன்... திடீரென்று தன் அதிகாரப்பூர்வமான வாகனத்தை விட்டு இறங்கி விடுகிறார். சாலைகளின் இரு பக்கமும் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் திரண்டிருக்கிறார்கள். திடீரென்று பாதுகாப்பு அரண்களை தாண்டி வெளியே வந்துவிடுகிறார். காவல்துறை அதிகாரிகள் தவிக்கிறார்கள். ஐயோ... பாதுகாப்பு வளையத்தை விட்டு முதலமைச்சர் மக்களை நோக்கிச் செல்கிறாரே... எதிர்பாராமல் ஏதாவது நேர்ந்து விட்டால்... என்று அவர்கள் துடிக்கிறார்கள். முதலமைச்சருக்கு தெரியும். காவலர்களை... என் பாதுகாவலர்களே... எதிர்பாராத எதுவும் எனக்கு நேராது. ஏனென்றால், என்னை பாதுகாக்கிறவர்கள் உங்களைவிட, என் மக்கள் தான் என்னை பாதுகாக்கிறார்கள் என்பது முதலமைச்சருக்குத் தெரியும். அதனால் தொட்டு பேசுகிறார்; கைகுலுக்குகிறார்; உரிமையோடு மனுக்களை பெற்றுக் கொள்கிறார்; பரிசீலிக்கிறார்; முடிந்த அளவு செய்கிறார்.

ஒரு முறை முதலமைச்சர் கலைஞர் அவர்களை கேட்டேன், ‘இந்த மனுக்களில் எத்தனை மனுக்களை நீங்கள் நிறைவேற்றிக் கொடுக்கிறீர்கள் ஐயா. எத்தனை விழுக்காடு என்று சொல்ல முடியுமா?’. இந்தக் கேள்வியை ஒரு முதலமைச்சரைப் பார்த்து யாரும் கேட்க முடியாது. ஏன் தெரியுமா? அனைத்து மனுக்களையும் நிறைவேற்ற முடியாது. அந்த மனுக்களில் சில பேர் எழுதி இருப்பார்கள்... என்னை அடுத்த முதலமைச்சர் ஆக்குவது எப்போது? என்று கேட்டிருப்பார்கள். சில பேர், எங்கள் ஊர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி எனக்கு ஐந்து ஏக்கர் இலவச நிலம் கொடுக்கச் சொல்லுங்கள் என்று கேட்டிருப்பார். சில பேர், என் மனைவியின் சண்டையை தீர்த்து வைக்க முடியுமா? என்று கேட்டிருப்பார்.

இப்படி எல்லாம் மனுக்கள் வரும். அனைத்து மனுக்களையும் நிறைவுசெய்ய முடியாது. எது நியாயமானதோ? எது சட்டத்தால் உண்மையாகவே கொடுக்கப்பட வேண்டியதாக இருந்து, மறுக்கப்பட்டு இருக்கிறதோ? எவன் மெய்யாகவே பாதிக்கப்பட்டிருக்கிறானோ? எவன் தகுதி உடையவனோ? அவனுக்குத்தான் அது வழங்கப்பட முடியும். அதனால், இந்த மனுக்களில் எத்தனை விழுக்காடு நீங்கள் நடவடிக்கை எடுக்கிறீர்கள்? என்பதற்கு கலைஞர் என்னிடம் சொன்னார், முப்பது விழுக்காடு. 30 விழுக்காடு என்பதே மிகப்பெரியது என்பது எனக்கு தெரியும்.

நீதியரசர்கள் அறிவார்கள். இவர்களெல்லாம் உண்மை அறிந்தவர்கள். வருகிற கோரிக்கை மனுக்களில் 100 விழுக்காடும் அமலுக்கு வரும் என்று சொல்லிவிட முடியாது. ஆனால், தளபதி அவர்கள் மனுக்களைப் பெறுகிறார்; உரிய அதிகாரிகளுக்கு கொடுக்கிறார்; அது ‘CM Cell’க்கு செல்கிறது; முடிந்த அளவு தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று அவர் நெஞ்சார்ந்த நினைக்கிறார்.

**ஏழைகள் பயன்பெறுகிறபோதுதான் ஒரு அரசு நிலைக்கும்.**

**‘அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே**
**செல்வத்தைத் தேய்க்கும் படை’**

என்று வள்ளுவன் சொல்லி இருக்கிறான். ஏழை மக்களின் கண்ணீரை சுண்டி எரிகிற நல்ல விரல் எதுவோ, அதுதான் நல்ல அரசு; ஏழை மக்களின் வீட்டுக்குள் அடுப்பில் தீயை மூட்டுகிற விரல் எதுவோ, அதுவே நல்ல விரல்; ஏழை மக்களின் வீட்டுக்குள் புகைகிற நெருப்புதான், ஒரு உண்மையான ஜோதி என்று நாங்கள் கவிஞர்கள் கருதுவோம்.

### நீதியரசர்களுக்கு பிடித்த கவிதை!

ஒரு நல்ல கவிதையை சொல்ல வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ஒரு ரஷ்யக் கவிதை. நீதியரசர்களுக்கு மிகவும் பிடிக்கும். நீதியரசர்கள் எல்லாம் பாவம் என்று நினைப்பேன். ஏனென்றால், இவர்கள் சட்டத்தோடு புகுந்து புகுந்து, தலைக்கு வெளியே இருப்பவர்கள். எதையும் சட்டத்தோடு பார்த்து, இது பிரிவில் இருக்கிறது என்று மூளையைக் கிளறிக் கொண்டே இருப்பவர்கள். அவர்கள் விதைத்துப் போன சட்டத்தோடு ஒட்டிக் கொண்டிருக்கிற மனிதர்கள். அவர்கள் வெல்ல, அவர்களுக்கு மலர்கள் வேண்டும்; அவர்களுக்கு புல்லாங்குழல் ஓசைகள் வேண்டும்; தமிழின் ஓசைகள் வேண்டும்; நாகம் வேண்டும்; கீதம் வேண்டும்; நல்ல தமிழ்ப் புலவனின் கவிதைகள் வேண்டும்; நல்ல சங்கீதம் கேட்க ஆசைப்படுவார்கள்; அதற்குரிய மேடை, இதுதான். நீதிபதிகளே... அதற்குரிய மேடை இதுதான்.

**ரஷ்யக் கவிதை, ‘ஒரு நதி ஓடிக் கொண்டிருக்கிறது. அந்த நதியை ஒரு கவிஞன் பேட்டி காண்கிறான். ‘நதியே... உன் பயணத்தில் நீ ஆனந்தமாக இருக்கிற தருணம் எது?’ என்ன அழகான கேள்வி! நதி, மௌனத்தையே பரிசாக தந்து ஓடிக் கொண்டிருந்தது. இவன் திருப்பி கேட்டான், ‘நதியே சொல், எப்போது நீ ஆனந்தமாய் இருக்கிறாய்? நிலாவின் பிம்பம், உன் தண்ணீர் தரையில் விளையாடுகிற பொழுதா?’ நதி ‘இல்லை’ என்றது. ‘கன்னி கழியாத பெண்கள், உன் மீது விழுந்து குடைந்து பகுடைந்து நீராடும் பொழுதா? இல்லை. நதிக்கரையோரத்து மரங்கள், உன் மீது பூச்சொரிகின்றனவே... அப்பொழுதா? இல்லை. மழையின் துளிகள், உன் வாசலில் விழுந்து கோலம் வைக்க புள்ளிகள் போடுகின்றனவே... அப்பொழுதா? இல்லை. வேறு எப்போது சொல்? நதியே... நீயே சொல்? உன் பயணத்தில் ஆனந்தமாக இருக்கிற தருணம் எது?’**

**நதி சொன்னது: ‘எப்போது ஒரு ஏழைக் கிழவி, தன் மண்பானையை எனக்குள் அமிழ்த்து நிரப்பிக் கொள்கிறாளோ, அந்த ஓசையில்தான் நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். ஓர் ஏழைக் கிழவியின் மண் பானைக்குள் நான் புகுந்து நிறைகிற சத்தத்தில் நான் சந்தோஷமாக இருக்கிறேன்’. இந்த நதி அடையும் சந்தோஷத்தைதான் நம்முடைய தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அடைந்து கொண்டிருக்கிறார் என்பதுதான் உண்மை.**

நான் நிறைய சொல்லலாம்... இரு மொழித் திட்டத்தில் அவர் காட்டுகிற உறுதி; டெல்லி ஏகாதிபத்தியத்தின் மீது அவர் காட்டுகிற நிலைப்பாடு; தமிழ் மக்கள் மீது அவர் வைத்திருக்கும் நேசம்; இந்தத் தமிழ்நாட்டை, முன்னோடி மாநிலமாக மாற்றி விட வேண்டும் என்ற அவரது சிந்தனை இவற்றையெல்லாம் பார்த்து நாம் பெருமிதப்பட வேண்டியிருக்கிறது.

‘இந்தியா டுடே’ ஒரு கருத்துக் கணிப்பு நடத்தியது. இந்தியாவின் பெருமைக்குரிய செல்வாக்குமிக்க முதலமைச்சர் யார் என்று அனைத்து மாநிலங்களையும் ஆராய்ச்சி செய்து, ‘தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தான் செல்வாக்குமிக்க முதலமைச்சர்’ என்று பட்டியல் கொடுத்திருக்கிறது.

அண்மையில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார் முதலமைச்சர். எனக்கு ஆர்வம்... அவரைத் தொலைபேசியில் அழைத்து, ‘அனைத்துக் கட்சி கூட்டம் எப்படி இருந்தது; நன்றாக இருந்தது என்று என் காதுகளுக்கு செய்தி வந்தது. நீங்கள் எப்படி நினைக்கிறீர்கள்?’ என்று கேட்டேன். ‘மிகவும் நன்றாக இருந்தது அண்ணா’ என்று உற்சாகத்தோடு சொன்னார் முதலமைச்சர்.

அதற்குப் பிறகு, நான் விரிவாகப் பார்த்தேன். அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த கட்சிகளின் எண்ணிக்கை 58. இத்துணைக் கட்சிகளையும் ஒரு கூரையின் கீழ் ஒரே கூடத்தில் கூட்டுவதற்கான திறமையும் தைரியமும் ஞானமும் ராஜதந்திரமும் முதலமைச்சர் அவர்களுக்கு வாய்த்திருக்கிறது. இது எவ்வளவு பெரிய விஷயம்? யார் அழைத்தாலும் வந்துவிடுவார்களா?

ஒரு நாள், முத்தமிழறிஞர் கலைஞரும் நானும் ஒரு கலைக் குடும்பத்து திருமணத்திற்குச் சென்றிருந்தோம். நானும், தமிழ்க் குடிமகன் அவர்களும், இன்னொரு அமைச்சரும் பின்னிருக்கையில் அமர்ந்திருந்தோம். முன்னிருக்கையில் கலைஞர். ஒரு புகழ்பெற்ற இசைக் குடும்பத்தின் இல்லத் திருமணத்திற்கு சென்றிருந்தோம். கூட்டம் பொங்கி வழியும்; எவ்வாறு செல்வது? எவ்வாறு வருவது? என்று கருதிக்கொண்டு சென்றோம். அங்கு சென்று பார்த்தால், கூட்டமே இல்லை. 40 முதல் 50 பேர்தான் இருந்தார்கள். ‘இவர் புகழ்பெற்ற ஆளாயிற்றே... ஏன் கூட்டமே இல்லை?’.

நான் சொன்னேன்: ‘ஐயா, நாம் எத்துணை பேரை மதிக்கிறோமோ... அத்துணை பேர் நம்மை மதிப்பார்கள். நாம் எத்துணைத் திருமணங்களுக்கு செல்கிறோமோ... நம் வீட்டுத் திருமணத்திற்கு அத்துணைபேர் வருவார்கள். எத்துணை வீட்டின் துக்கத்திற்கு நாம் சென்றிருக்கிறோமோ, அத்துணைபேர் நம்வீட்டுத் துக்கத்திற்கு வருவார்கள். இவர்கள் யாரையும் மதிப்பதில்லை போலும்; அதனால் கூட்டம் வரவில்லை’ என்று சொன்னேன்.

கலைஞர் ஒரு கதை சொன்னார்: ‘எங்கள் ஊரில் ஒரு ஜமீன்தார் இருந்தார். யார் செத்தாலும், இவன் இழவுக்கு நான் செல்வதா? அவ்வளவு பெரிய ஆளா? என்று தன் சார்பில் தன் கைத்தடியை அனுப்பிவிடு’ என்று தன் வேலைக்காரரை அழைத்து, கைத்தடியை கொடுத்து விடுவார். அவர் கைத்தடியை, அவன் இழவு வீட்டில் வைத்துவிட்டு, சிறிது நேரம் இருப்பான். பிறகு, எடுத்து வந்துவிடுவான். ஜமீன்தார் வந்து சென்றதற்கு அடையாளமாம். இவ்வாறு, யார் செத்தாலும் ஜமீன்தார் வீட்டுக் கைத்தடி, அந்த வீட்டில் இரண்டு நிமிடம் கிடக்கும்.

ஜமீன்தார் இறந்துவிட்டார். ஜமீந்தார் வீட்டிற்கு சென்று பார்த்தால் வெளியே ஆயிரம் கைத்தடி. நீ ஆள் அனுப்பி இருந்தால், நாங்களும் ஆள் அனுப்பி இருப்போம்; நீ கைத்தடியை அனுப்பியிருந்ததால், நாங்களும் கைத்தடியை அனுப்பியிருக்கிறோம்.

இப்போது தெரிகிறதா? அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு 58 கட்சித் தலைவர்கள் எப்படி வந்தார்கள் என்று. நம் முதலமைச்சர் அனைத்துக் கட்சிகளையும் நேசிக்கிறார்; தமிழர்களையும் நேசிக்கிறார். அதனால், அந்தக் கூட்டம் வெற்றி பெற்றது. தளபதி வாழ்க; தமிழ்நாடு வாழ்க; தமிழ் வாழ்க; இந்த மன்றம் வாழ்க; வாழ்த்த வந்திருக்கும் பெருமக்கள் வாழ்க;

இவ்வாறு கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் உரையாற்றினார்.